[வலைப்பின்னல் மாற்றுமுறை]

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *1999 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பகிரங்க சேவை ஒய்வூதியம் பெறுநர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்*

---

[*1999, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*.]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1999, திசெம்பர் மாதம் 03 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை: ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 3.50**

**1999 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பகிரங்க சேவை ஓய்வூதியம் பெறுநர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்**

[*1999 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*ச.வ. – ஓ. 57/96*

**பகிரங்க சேவை ஓய்வூதியம் பெறுநர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் என அழைக்கப்படும் நம்பிக்கைப்பொறுப்பு நிதியமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அதன் குறிக்கோள்களையும் தத்துவங்களையும் குறித்துரைப்பதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*கருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

**1.** இச்சட்டமானது, 1999 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பகிரங்க சேவை ஓய்வூதியம் பெறுநர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியன்று (இது இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*பகிரங்க சேவை ஓய்வூதியம் பெறுநர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைத் தாபித்தல்.*

**2.** (1) இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், பகிரங்கசேவை ஓய்வூதியம் பெறுநர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என அழைக்கப்பட வேண்டிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியமானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெதுயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டிருத்தலும் வேண்டும். அது அப்பெயரில் வழக்குத்தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடரவும்படலாம்.

*நிறைவேற்றுக்குழு.*

**3.** (1) நிதியத்தின் நிருவாகம், முகாமை, கட்டுப்பாடு என்பன இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அமைத்துருவாக்கப்பட்ட நிறைவேற்றுக்குழுவொன்துக்கு, பொறுச்சபையின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய, உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) நிறைவேற்றுக்குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பொதுச்சபையினால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு தவிசாளர் மூன்று துணைத் தவிசாளர்கள், ஒரு செயலாளர், ஓர் உதவிச் ெயளாளர் ஒரு பொருளாளர் அத்துடன் உதவிப் பொருளாளர்; அத்துடன்

(ஆ) மாவட்ட மட்டத்திலான ஓய்வூதியம் பெறுநர் கழகம் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு பிரதிநிதி.

(3) நிறைவேற்றுக்குழுவின் ஓர் உறுப்பினர், அவர் இறந்தால், தவிசாளருக்கு அல்லது செயலாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதம்மூலம் பதவி விலகினால் அல்லது விடயத்துக்கேற்றாற் போல பொதுச்சபையினால் அல்லது மாவட்ட மட்ட ஓய்வூதியம் பெறுநர் கழகத்தினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி, விடயத்துக்கேற்ப அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து பொதுச்சபையின் அடுத்த ஆண்டுப் பொதுக்கூட்டம் வரை பதவி வகித்தல் வேண்டும்.

*பொதுச்சபை.*

**4**. பொதுச்சபை, நிறைவேற்றுக்குழுவின் உறுப்பினர்களையும் , மாவட்ட மட்டத்திலான, ஓய்வூதியம் பெறுநர் கழகம் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு பிரதிநிதியையும், பெரும்பாக மட்டத்திலான ஓய்வூதியம் பெறுநர் கழகம் ஒவ்வொனறிலிருந்தும் ஒரு பிரதிநிதியையும் கொண்டிருத்தல் வேண்டும், நிறைவேற்றுக் குழுவினால் நிதியம் நிருவகிக்கப்பட்டு முகாமைசெய்யப்படுவதற்கான வழிகாட்டுநெறிகளைக் தீர்மானித்தல் பொதுச்சபையின் கடமையாதல் வேண்டும்.

*பொதுச் சபையின் கூட்டங்கள்.*

**5**. (1) பொதுச்சபை ஓர் ஆண்டுக்கு ஒரு தடவை கூடுதல் வேண்டும்.

(2) ஓய்வூதியப் பணிப்பாளர், பொதுச்சபையின் முதலாவது ஆண்டுக் கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் அக்கூட்டத்தில் தலைமைதாங்கி அதை நடாத்துதலும் வேண்டும்.

(3) ஒரு நிருவாக மாவட்டத்திற்கான மாவட்டச் செயலாளர் அந்த நிருவாக மாவட்டத்திற்கென அமைக்கப்பட்ட ஓய்வூதியம் பெறுநர் கழகத்தின் முதலாவது கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்கி அதை நடாத்துதலும் வேண்டும்.

(4) ஒரு பெரும்பாகச் செயலாள்ர் பிரிவிற்கான பெரும்பாகச் செயலாளர், அந்தப் பெரும்பாகச் செயலாளர் பிரிவுக்கென அமைக்கப்பட்ட ஓய்வூதியம் பெறுநர் கழகத்தின் முதலாவது கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கூட்டத்தில, தலைமைதாங்கி அதை நடாத்துதலும் வேண்டும்.

(5) நிறைவேற்றுக்குழு, பொதுச்சபையின் ஆண்டுக் கூட்டத்தில் விடயத்திற்கேற்ப தேர்ந்தெடுக்கப்படுதல் அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(6) பொதுச்சபையின் ஆண்டுக் கூட்டத்தில் கொண்டுவரப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் பிரேரணை பற்றி, ஆகக்குறைந்தது பதினாலு நாட்கள் எழுத்திலான அறிவித்தல் பொதுச்சபையின் எவரேனும் உறுப்பினரினால் செயலாளருக்கு கொடுக்கப்படுதல் வேண்டும்.

(7) பொதுச்சபையின் ஆண்டுக் கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரல், அத்தகைய கூட்டத்திற்கு ஆகக்குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னராக, செயலாளரினால், பொதுச்சபையின் எல்லா உறுப்பினர்களுக்கும் எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

ஆண்டுக்கூட்டத்தின் கூட்ட நடப்பெண்.

**6.** பொதுச்சபையின் ஆண்டுக் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் பொதுச்சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் ஒன்றாதல் வேண்டும்.

நிறைவேற்றுக் குழுவின் கூட்டங்கள்.

**7.** (1) நிறைவேற்றுக்குழு ஒவ்வொரு மாதத்திலும் ஆகக்குறைந்தது ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும்.

(2) நிறைவேற்றுக்குழு, அவசரமான விடயங்களைக் கையாள்வதற்கென, எந்நேரத்திலும் பொதுச்சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டலாம்.

(3) பொதுச்சபையின் அத்தகைய ஒரு விசேட கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல், அத்தகைய கூட்டத்திற்கு ஆகக்குறைந்தது ஏழுநாட்களுக்கு முன்னராக, செயலாளரினால், பொதுச் சபையின் எல்லா உறுப்பினர்களுக்கும் எழுத்தில் அறிவிக்கப் படுதல் வேண்டும்.

(4) பொதுச்சபையின் ஒரு விசேட கூட்டத்தைக் கூட்டுகின்ற அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட அலுவல் தவிர்ந்த வேறு அலுவல் எதுவும் அத்தகைய கூட்டத்தில் கையாளப்படுத்த லாகாது.

*விசேட கூட்டத்தின் கூட்ட நடப்பெண்.*

**8**. பொதுச்சபையின் ஒரு விசேட கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் பொதுச்சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் ஒன்றாதல் வேண்டும்.

*நிறைவேற்றுக் குழுவின் கூட்டங்கள்.*

**9**. (1) தவிசாளர், நிறைவேற்றுக்குழுவின் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமைதாங்க வேண்டும், நிறைவேற்றுக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் வருகைதராதிருந்தால் துணைத்தவிசாளர்களில் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்க வேண்டும்.

(2) இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் விதிகளினதும் ஏற்பாடுகளுக்கமைய, நிறைவேற்றுக்குழு, அதனது கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவலைக் கொண்டுநடாத்துதல் தொடர்பான நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(3) நிறைவேற்றுக்குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக அல்லது அதன் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தலில் அல்லது பெயர்குறித்து நியமித்தலில் உள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக மாத்திரம், செல்லுபடியற்றதெனக் கருதப்படுதலாகாது.

**10** நிதியத்தின் குறிக்கோள் ஓய்வூதியம் பெறுநர்களின் கீர்த்தியையும், கௌரவத்தையும் பேண அவர்களுக்கு உதவி செய்வதன்மூலம் அவர்களின் பொதுநலனை மேம்படுத்து தலாதல் வேண்டும். நிதியத்தின் குறிக்கோள்.

**11.** (1) நிறைவேற்றுக்குழு, நிதியத்தின் பெயரில் ஆனால், பொதுச்சபையின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, நிதியத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உகந்ததாகவுள்ளதான அல்லது, அவற்றின் இடைநேர்விளைவான எல்லாச் செயல்களையும் செய்வதற்குத் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். நிறைவேற்றுக் குழுவின் தத்துவங்களும் பணிகளும்.

(2) ஓராம் உட்பிரிவால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, நிறைவேற்றுக்குழுவானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டி ருத்தல் வேண்டும்

(அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடமானம் வைத்தல், விற்றல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(ஆ) ஏதேனும் வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் நடைமுறை சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறத்தல் அத்துடன் பேணுதல் ;

(இ) நிதியத்தை நிருவகித்து முகாமைசெய்யும் நோக்கத்திற்காக அவசியமாகக்கூயவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் ஊழியத் தில் ஈடுபடுத்துதல் ;

(ஈ) நிதியத்தின் குறிக்கோளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளுதல் அத்துடன் ;

(உ) நிதியத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு உசிதமான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான மற்றெல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்தல்.

நிதியத்தின் இலச்சினை.

**12.** நிதியத்தின் இலச்சினையானது, நிறைவேற்றுக்குழு, காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும். இலச்சினையானது, நிறைவேற்றுக்குழுவின் அனுமதியுடனன்றியும், தவிசாளர் அத்துடன் பொருளாளர் அல்லது துணைத் தவிசாளர் அல்லது ஒரு உதவிச் செயலாளரின் முன்னிலையிலன்றியும் சாதனம் அல்லது ஆவணம் எதிலும் பொறிக்கப் படுதலாகாது, அவர்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அவ்விதம் கையொப்பம் இடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காராகக் கையொப்பம் இடுதலில் இருந்து தனிவேறானதாதல் வேண்டும்.

ஓய்வூதியங்களில் இருந்து மாதாந்தக் கழிப்பனவு.

**13.** ஓய்வூதியம் பெறுநர் ஒருவருக்குச் செலுத்தப்படற் பாலதான மாதாந்த ஓய்வூதியத்திலிருந்து அத்தகைய ஓய்வூதியம் பெறுநர் அத்தகைய கழிப்பனவிற்கு எழுத்தில் சம்மதித்தால், தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தொகையானது, கழிக்கப்படுதல் வேண்டும். இப்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றிச் செய்யப்படும் எல்லாக் கழிப்பனவுகளும் நிதியத்தால் வரவு வைக்கப்படல் வேண்டும்.

நிதியத்திற்கான கொடுப்பனவு.

**14.** பின்வருவன நிதியத்திற்குள் செலுத்தப்படல் வேண்டும் :-

(அ) பிரிவு 13 இன் கீழ் செய்யப்படும் எல்லாக் கழிப்பனவுகளும் ;

(ஆ) திரட்டப்பட்ட எல்லா நிதியங்கள் அல்லது உள்நாட்டு அல்லது வெறிநாட்டு மூலங்களிலிருந்து நிதியத்தினால் பெறப்பட மானியங்கள், கொடைகள் அல்லது நன்கொடைகள் ;

(இ) நிதியத்தின் முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட எல்லா வருமானமும்.

நிதியத்தில் இருந்தான கொடுப்பனவு.

**15.** பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும் :-

(அ) நிதியத்தின் தொழிற்பாடு, தாபிதம் அல்லது பராமரித் தலில் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் ; அத்துடன்

(ஆ) நிதியத்தின் குறிக்கோள்களைக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்கு அவசியமாகவுள்ளதென நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரிகப்பட்டுள்ளவாறான அல்லது நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டுமென இச்சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய வேறு எல்லாக் கொடுப்பனவுகளும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

***16***. *(1)* நிறைவேற்றுக் குழுவானது நிதியத்தின் வரவு, செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள் அத்துடன் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய செம்மையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

*(2)* நிதியத்தின் கணக்குகள் முன்னய ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பொதுச்சபையினால் தெரிவு செய்யப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப் படல் வேண்டும்.

*(3)* இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கணக்காய் வாளர், ஒவ்வோர் ஆண்டின் திசெம்பர் முப்பத்தோராம் நாளுக்குப் பின்னர் சாத்தியமாகக்கூடியளவு விரைவாக, அவ்வாண்டின் போதான நிதியத்தின் அலுவல்களின் நிருவாகம் பற்றிய அறிக்கையொன்னறயும்,நிதியத்தின் வரவு மற்றும் செலவு பற்றியதும் அவ்வாண்டின் போதான நிதியத்திற்குச் சொந்தமான பணத்தின் முதலீடு பற்றியதுமான கூற்றொன்றுடன் சேர்த்துத் தயாரித்தல் வேண்டும், கணக்காய்வாளர், அத்தகைய அறிக்கைகளை நிறைவேற்றுக் குழுவுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் நிறைவேற்றுக் குழுவானது அவற்றின் பிரதி ஒன்றைப் பொதுச்சபையின் அடுத்த ஆண்டுக் கூட்டத்தில் பொதுச்சபையின் முன் வைப்பிக்கச் செய்வித்தல் வேண்டும்.

*(4)* இப்பிரிவின் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்னும் சொல்லமைப்பானது

*(அ)* இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருந்து அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகச் செயலாற்றுவதற்கென வழங்கப் பட்ட சான்றிதழொன்றைக் கொண்டிருப்பவரான தனியாள் ஒருவர் ; அல்லது

*(ஆ)* அதன் ஒவ்வொரு வதியும் பங்காளர்களும் இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிதியத்தன் உறுப்பினராகவிருந்து அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகச் செயலாற்று வதற்கென வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டுள்ள பட்டயம் பெற்ற கணக்காளர்கள் குழுமம் ஒன்று என்று பொருளாகும்.

*விதிகளை ஆக்குவதற்கான தத்துவம்.*

**17**. நிறைவேற்றுக் குழுவானது அதன் தத்துவங்களையும், கடமைகளையும் அத்துடன் பணிகளையும் பிரயோகிப்பதை, நிறைவேற்றுவதை அத்துடன் புரிவதைப் பாதிக்கின்ற அல்லது அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றிற்கு இடைநேர் விளைவான ஏதேனும் கருமம் தொடர்பில் அவசியமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய விதிகளை ஆக்கலாம். (இவற்றுள் பொச்சபையினால் நிறைவேற்றுக் குழுவானது தெரிவு செய்யப்படுதல், நிறைவேற்றுக் குழுவுக்கு மாவட்ட மட்டத்திலான ஓய்வூதியம் பெறுநர் கழகங்களின் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுதல்,(பொதுச்சபைக்கூட்டங்களைக் கூட்டுதல் மற்றும் நடாத்துதல் மற்றும் மாவட்ட மட்டத்திலான அத்தடன் பெரும்பாக மட்டத்திலான ஓய்வூதியம் பெறுநர் கழகங்கள் தொடர்புபட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலான ஏற்பாடும் உள்ளடங்கும்.)

*இச்சட்டத்தின்கீழ் எடுக்கப்படும் நடவடிக் கைக்கான நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களுக் கான பாதுகாப்பு*

**18**. (1) நிறைவேற்றுக் குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது நிதியத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக, இச்சட்டத்தின்கீழ் அல்லது நிறைவேற்றுக் குழுவின் பணிப்புரையின் மீது அத்தகைய உறுப்பினரால், அலுவலரால் அல்லது சேவையாளரால் நல்லெண்ணத்துடன் புரியப்பட்ட அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காகத் துடர்ச்சி அல்லது வழக்குத் தொடுப்பு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் நிதியத்தினால் அல்லது அதற்கதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வழக்குத் தொடுப்பில் நிதியத்தால் உறப்படும் ஏதேனும் செலவினமானது நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வழக்குத் தொடுப்பில் நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது நிதியத்தில் பெறப்பட்ட ஏதேனும் செலவுத் தொகைகள் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது நிறைவேற்றுக் குழுவின் பணிப்புரையிண். மீது எவரேனும் உறுப்பினரால், அலுவலரால் அல்லது சேவையாளரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வழக்குத் தொடுப்பில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவானது, அத்தகைய செலவானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றமானது கருதினால், அத்தகைய செலவானது அத்தகைய துடர்ச்சியில் அல்லது வழக்குத்தொடுப்பில் அவரால் அறவிடப்பட்டாலன்றி நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**19**. நிதியத்திற்கெதிராக கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் நிறைவேற்றுக் குழுவின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக அல்லது அவரது ஆவணத்திற்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

நிறைவேற்றுக்குழுவின் உறுப்பினர் ஒருவருககுஅல்லது அவரது ஆவணத்திற்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படலாகது.

**20**. நிதியமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

நிதியமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்.

21. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**22**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி

பொருள்கோடல்.

"மாவட்ட மட்டத்திலான ஓய்வூதியம் பெறுநர்கள் கழகம்" என்பது, நிருவாக மாவட்ட மொன்றிற்கென அமைக்கப் பட்ட ஓய்வூயம் பெறுநர் கழகமொன்று என்று பொருள்படும் ;

"பெரும்பாக மட்டத்திலான ஓய்வூதியம் பெறுநர் கழகம்" என்பது, பெரும்பாகச் செயலாளர்கள் பிரிவொன்றிற் கென அமைக்கப்பட்ட ஓய்வூதியம் பெறுநர் கழகமொன்று என்று பொருள்படும்.

"ஓய்வூதியம் பெறுநர்" என்பது

(அ) பகிரங்க அலுவலர் ஒருவராக, 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவையின் உறுப்பினர் ஒருவராக அல்லது ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவராக அவரது சேவையின் பயனைக்கொண்டு ;

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆள் ஒருவரின் விதவையாக தாரமிழந்தவராக அல்லது அனாதையாக அவர் இருப்பதன் பயனைக் கொண்டு,

அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள நிதியங்களிலிருந்து ஓய்வூதியமொன்றையும் பெறுகின்றவரான ஆள் ஒருவர் என்று பொருள்படும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ், இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*